2016

2016

401540

No. of Printed Pages : 3

**5951**

*Register Number*

முதலாம் ஆண்டு

# கற்கும் குழந்தை

**First Year**

# THE LEARNING CHILD

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : பகுதி **ஆ** மற்றும் பகுதி **இ** - ல் உள்ள வினாக்களுக்கு 1 வரிக்கு 5 வார்த்தைகள் வீதமும், ஒரு பக்கத்திற்கு 20 வரிகளுக்கு மிகாமலும் விடையளிக்க வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி. **15x2=30**

1. அறிதல் திறன் என்றால் என்ன?

2. நியூரானின் வேலை யாது?

3. மாணவர்களின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் ஆசிரியரது செயல்பாடுகள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

4. கவனம் - பொருள் தருக.

5. மனவெழுச்சி முதிர்ச்சி என்றால் என்ன?

6. மாணவர்களின் சமூக உணர்வினைத் தூண்டும் பள்ளிச் செயல்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

[ Turn over

7. குழந்தைகளுக்கான வீரர்கள் - குறிப்பு வரைக.

8. எப்பருவநிலையில் குழந்தைகள் நாயக வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்?

9. குழந்தைகளின் கற்கும் திறனை மேம்படுத்தும் செயல்பாடுகள் இரண்டினைக் கூறுக.

10. உட்காட்சி வழி கற்றல் மூலம் கண்டுபிடிப்புகள் நிகழ்த்திய மேதைகள் யாவர்?

11. சிக்கலான பொதுமைக் கருத்து என்றால் என்ன? உதாரணம் தருக.

12. பள்ளியின் சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்தும் செயல்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

13. அறிவை உருவாக்குதல் - சிறு குறிப்பு வரைக.

14. வகுப்பறைக் கலந்துரையாடலில் ஆசிரியரின் பங்கு யாது?

15. 93-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் முக்கிய குறிப்பு என்ன?

## பகுதி - ஆ

**II.** எவையேனும் **10** வினாக்களுக்கு **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் நாளமில்லா சுரப்பிகளின் பங்கினை விளக்குக.

17. பரிவு எனப்படுவது யாது? பரிவு எவ்வாறு மனித மேம்பாட்டிற்கு உதவுகிறது?

18. கற்றலில் சிந்தனையின் பங்கு யாது? குவி சிந்தனை மற்றும் விரிசிந்தனை என்றால் என்ன?

19. வகுப்பறை கற்றல் - கற்பித்தலில் ஒப்பார் குழுவின் செயல்பாட்டினை ஓர் உதாரணத்துடன் விளக்குக.

20. குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் நடைமுறை வழக்குக்கு முற்பட்ட நிலையை விளக்குக.

21. குமரப்பருவத்தினர் வளர்ச்சியில் மனவெழுச்சி முரண்பாட்டால் விளையும் பின் விளைவுகளை விளக்குக.

22. பயிற்சி மாற்றம் என்றால் என்ன? பயிற்சி மாற்றத்தின் வகைகளை விளக்குக.

23. காக்னேயின் கற்றல் படி நிலைகளை விளக்குக.

24. பொதுமைக் கருத்து உருவாதலுக்கான காரணிகள் யாவை?

25. கற்றலுக்கான சமூகக் காரணிகளில் பள்ளி, குடும்பம், சமுதாயத்தின் பங்கு யாது?

26. கற்பதற்காக கற்றுக் கொள்வதை (Learning to Learn) ஓர் உதாரணத்துடன் விளக்குக.

27. ஆக்கத்திறன் வளர்ச்சிக்கான செயல்பாடுகளை விவரி.

## பகுதி - இ

**III.** கீழ்க்கண்ட வினாக்களுக்கு 500 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக. **3x10=30**

28. (அ) தீவிர மனவெழுச்சிகளால் விளையும் உடல்நல பாதிப்புகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) தொடக்கப்பள்ளி மாணவர்களின் சமூக, மனவெழுச்சி மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் பள்ளிச்சூழல் எவ்வகையில் உதவியாக இருக்கும்?

29. (அ) மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சியில் தகவல் தொடர்பு ஊடகங்களின் பங்கினை விவரி.

**அல்லது**

(ஆ) கற்றல் என்றால் என்ன? கற்றலின் பயன்கள் யாவை?

30. (அ) எளிமை, நேர்மை என்னும் பொதுமைக் கருத்து உருவாதலை ஓர் உதாரணத்துடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) மாணவர்களின் கற்றலுக்கேற்ற உள பாதுகாப்புச் சூழலை விளக்குக.

-o0o-